**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>O.S. No. 798/2009</u>**

**<u>Date</u> : 24.06.2026**

**<u>பி. வா.சா.1 -</u> பால் நாடார்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜமாபந்திக்கான ஒவ்வொரு ஆண்டும் எந்த மாதம் நடைபெறும் என்றால் மே மற்றும் ஜுன். பிவாசாஆ 4 ஆவணம் ஜமாபந்தியில் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. பிவாசாஆ 4 எந்த அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் கண்காணிப்பு மற்றும் தீர்வு அலுவலகத்தில். பிவாசாஆ 5 ரசீது எந்த மனுக்கான கொடுத்த ரசீது என்றால் பிவாசாஆ 4 மனுக்கானது. பிவாசாஆ 5 ரசீது TN Revenue KKM / I/JMB/ 25.05.22/3634428 என்று குறிப்பிடப்பட்டுள்ளது அது 25.05.2022 ல் அனுப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 5ல் யாருடைய தொலைபெசி எண்ணிற்கு அனுப்பட்டது என்பது துலங்காது என்றால் சரிதான். பிவாசாஆ 5 யாரால் எந்த தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றோ அச்சுப்பதிவு செய்யப்பட்டது என்றோ துலங்காது என்றால் சரியல்ல.

பிவாசாஆ 5ற்கு பதிவிறக்கம் செய்யப்பட்டவரோ அச்சிப்பதிவு செய்யப்பட்டவரோ சான்றிதழ் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. யார் சான்றிதழ் கொடுத்துள்ளார் என்றால் தாலுகா அலுவலகத்திலிருந்து வந்துள்ளது. பிவாசாஆ 5 ஆவணத்திற்கு பதிவிறக்கம் செய்யப்பட்டவரோ அச்சிப்பதிவு செய்யப்பட்டவரோ சான்றிதழ் கொடுக்காததால் சாட்சியம் சட்டத்தின் படி செல்லத்தகாத ஆவணம் என்றால் சரியல்ல. பிவாசாஆ 5ல் கூறப்பட்டுள்ள 3634428 என்ற மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்

செய்துள்ளேன். மேற்படி மனுவின் மீது விசாரணை நடைபெற்றதா என்றால் நடைபெற்றது ஆர்.டி.ஓ. நடத்தினார். மேற்படி விசாரணைக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் என்னை மட்டும் விசாரித்தார்.

நான் எந்த தேதியில் ஆர்.டி.ஓ முன்பாக விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் கொடுத்த வாக்குமூலத்தை வைத்து தான் ஆர்.டி.ஓ பிவாசாஆ 6 உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். பிவாசாஆ 6 உத்தரவிற்கான தேதி 21.03.2023 என்றால் சரியல்ல. அது மனுவின் தேதி 24.08.2023 தான் உத்தரவு பிறப்பித்த தேதி. மேற்படி பிவாசாஆ 6ல் எனக்கு உத்தரவை தெரிவித்த நாள் தான் 24.08.2023 உத்தரவை பிறப்பித்த நாள் 21.03.2023 என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் பிவாசாஆ 5 ரசீதை ஆராய்ந்து தான் உத்தரவை பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். பிவாசாஆ 6 உத்தரவிற்கு எதிராக நான் செய்த மேல்முறையீடு தான் பிவாசாஆ 7 என்றால் சரிதான். மேற்படி பிவாசாஆ 7ல் பட்டாதாரரின் கணவரை விசாரித்துள்ளதாக - குறிப்பிட்டுள்ளேன் எந்த தேதியில் யார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். எந்த தேதி மற்றும் யார் விசாரித்தார்கள் என்பது தெரியாது.

பிவாசாஆ 7 மேல் முறையீடு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும் படி மேல்முறையீடு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 331/12 எந்த ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது என்றால் என்னால் கூற இயலாது. சிவதானுலிங்க நாடார் எழுதிக் கொடுத்த பத்திரத்தில் வாசாஆ 1ல் சர்வே எண் 331/12 குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பழைய சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. பிவாசாஆ 4ல் சர்வே எண் 331/12 சிவதானுலிங்க நாடாருக்கு உரிமை கிடைத்து கிரையம் எழுதிக் கொடுத்தாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சிவதானுலிங்க

நாடாருக்கு பாக பத்திரத்தின் படியோ அல்லது அவர் எழுதிக் கொடுத்ததாகவோ சர்வே எண் 331/12 ல் புல எண் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். பழைய புல எண் குறிப்பிட்டுள்ளது. நான் வழக்கு தொடர்ந்து 13 ஆண்டுக்கு பின்பாக மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பெயரில் மனு கொடுத்தேன்.

சட்டப்படி 3 ஆண்டுகளுக்கு முன்பாக நில சம்மந்தமாக மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் ஞாபகம் இல்லை. நான் வருவாய் துறையில் எத்தனை ஆண்டுகாலமாக வேலைபார்த்தேன் என்றால் 30 ஆண்டுகள். எங்கள் சகோதரர் வருவாய் துறையில் பணியாற்றி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக இருந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். ஆகையால் பிவாசாஆ 5 ஆவணம் வருவாய்த்துறை அல்லது நில அளவை அலுவலர்களை சுவாதினப்படுத்தி பெறப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கின் எதிருரையிலோ கூடுதல் எதிருரையிலோ மேற்படி சங்கதி குறித்து தாக்கல் செய்துள்ளதால் மேற்படி ஆவணங்கள் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**2, 3 மற்றும் 4வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என கூறப் பட்டதன் பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**